# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : S.T.C. 1941/2025**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 27.10.2025.**

| Name : Pushparaj | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் திப்பரத்தாம்பட்டியில் குடியிருந்து லாரி ஓட்டுநராக வேலை செய்கிறேன். 09.09.2024 ம் தேதி இரவு 9 மணிக்கு தொப்பூரிலிருந்து மேச்சேரி நோக்கி இரு சக்கர வாகனமான unicorn TN 52 X 9230 வாகனத்தில் நானும் என் பெரியப்பா மகன் சம்பு இருவரும் சாப்பிடுவதற்காக தொப்பூர் நோக்கி சென்ற போது ktm இரு சக்கர வாகனம் எதிரே வந்து மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தின் காரணமாக என் வலது கால் பெருவிரல் துண்டித்து காயம் ஏற்பட்டது. வலது பக்க கையில் காயம் ஏற்பட்டு சேலம் வள்ளி மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக சென்று 2 நாட்கள் சிகிச்சை பெற்றேன். எனக்கு முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது. இந்த விபத்திற்கு காரணம் எதிரே வந்த இரு சக்கர வாகன ஓட்டுநர் தான். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு

தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**.இல்லை.

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

## DEPOSITION OF WITNESS

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : S.T.C. 1941/2025**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 27.10.2025.**

| Name : பிரபு | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் திப்பரத்தாம்பட்டியில் குடியிருந்து கராத்தே பள்ளி நடத்தி வருகிறேன். அ.சா.1 புஷ்பராஜ் என் உள்ளூரைச் சேர்ந்தவர் என்பதால் எனக்கு தெரியும். கடந்த 2024ம் வருடம் இரவு 9 மணிக்கு நான் மளிகை கடை முன்பாக என் இரு சக்கர வாகனத்தில் நின்று கொண்டிருந்த போது மளிகை சாமான் வாங்கி வெளியே வந்த நிலையில் தொப்பூரிலிருந்து மேச்சேரி நோக்கி வந்த இரு சக்கர வாகனமான unicorn மீது ktm இரு சக்கர வாகனம் எதிரே வந்து மோதி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தை நான் நேரடியாக பார்த்தேன். விபத்தின் காரணமாக அ.சா.1 வலது கால் பெருவிரல் துண்டித்து காயம் ஏற்பட்டது. பிறகு காயமடைந்த நபரை சேலம் பீரித்தம் மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக அனுப்பி வைத்தோம். எதிரியை நான் பார்த்தேன். தற்போது பார்த்தால் அடையாளம் சொல்ல முடியுமா என்றால் நினைவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**